**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.56/2020**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.10** |
| **Name** | **:** | **திரு. அசோக்குமார்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 6.3.2023.**

**முதல் விசாரணை -**

**நான் ஓய்வு பெற்ற காவல் உதவி ஆய்வாளர். கடந்த 15.6.2019ஆம் ஆண்டு களம்பூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது இரவு 10.00 மணிக்கு எட்டிவாடி கிராமத்தை சேர்ந்த கண்ணன் என்பவரின் மகன் சாமி என்பவர் காவல்நிலையம் வந்து கொடுத்த புகாரினை**

பெற்று களம்பூர் காவல்நிலைய குற்ற எண்.320/2019 பிரிவு 294(பி), 324, 302 இதச-ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10.

கொலை வழக்கு என்பதால் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை மறுநாள் காலை ஆரணி நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் துரித தபால் மூலம் அனுப்பிக்கொண்டேன். மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் அவர்களின் புலன் விசாரணைக்கு நான் உடனிருந்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

முதல் தகவல் அறிக்கை 16.6.2019 அன்று காலை 10.40 மணிக்கு நீதிபதிகள் குடியிருப்பில் நீதித்துறை நடுவர் பெற்றதாக மேற்குறிப்பு உள்ளது என்றால் சரி தான். முதல் தகவல் அறிக்கையில் 15.6.2019 அன்றே நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியதாக பதிவு உள்ளது என்றால் சரி தான். 16.6.2019 அன்று 16.30 மணிக்கு குற்ற எண்.321/2019 என்ற வழக்கை தஞ்சியப்பன் மனைவி பவானி அவர்களிடம் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சிறப்பு உதவி ஆய்வாளர் பாலசங்கர் பதிவு செய்த புகார் வாக்குமூலத்தின்படி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி தான்.

குற்ற எண்.321/2019-க்கு நான் இறுதி அறிக்கையோ, குற்ற அறிக்கையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். இவ்வழக்கின் கோப்பை மேல் நடவடிக்கைக்காக எத்தனை மணிக்கு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் இரவு 10.15 மணிக்கு ஒப்படைத்தேன். ஆரணி நகர காவல் ஆய்வாளர் தான் வட்ட ஆய்வாளர்.

சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் இரவு 10.30 மணிக்கு சென்றோம். சம்பவ இடத்தில் எத்தனை மணி வரை இருந்தோம் என்றால் சுமார் 11.30 மணி வரை இருந்தோம். புகார் தாரர் சாமி காயம் பட்டதாக சொன்னதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் அவர் ஏற்கனவே வடமாதிமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்ததாக சொன்னார். அதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் பெற்று தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

எதிரி வீடும் அசா.1ன் வீடும் பக்கத்து பக்கத்து வீடு என்றால் சற்று தள்ளி உள்ளது. சுமார் 300 அடி தூரம் இருக்கும். எதிரியின் வீடு சாலையின் இடது பக்கமும், அ.சா.1னின் வீடு சாலையின் வலது பக்கமும் உள்ளது என்றால் சரி தான். எதிரியின் வீடு இருந்த இடத்தில் தான் சம்பவ இடம் என்றால் சரியல்ல. ரயில்வே டிராக்கை ஒட்டி உள்ள வாதியின் நிலத்தில் தான் சம்பவ இடம். சம்பவ இடம் சென்றபோது சுமார் 50,60 நபர்கள் இருந்தார்கள் என்றால் இருந்தார்கள். 50, 60 பேரில் ரயில்வே பாலப் பணியில் இருந்தவர்களும் இருந்தார்கள் என்றால் இருட்டு என்பதால் சரியாக தெரியவில்லை. ரயில்வே பாலபணி நடந்துக்கொண்டு இருந்ததால் போக்குவரத்து வாகனங்கள் எதிரியின் நிலத்தில் சென்றுக்கொண்டு இருந்தது என்றால் சரியல்ல. அங்கு நிறைய மாடுகள் கட்டப்பட்டு, வைக்கோல் போர் இருந்தது என்றால் இருட்டு என்பதால் தெரியவில்லை.

புகாரில் வாதி தங்களுக்கும் எதிரிக்கும் பொதுவான வரப்பு இருப்பதாக சொல்லியுள்ளாரா என்றால் சரி தான். வரப்பு என்று சொல்லவில்லை. சொந்தமான இடம் என்று சொல்லியுள்ளார். புகாரில் எங்கள் நிலம் வழியாக

தான் எதிரி செல்லவேண்டும் என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். எங்கள் நிலம் வழியாக தான் டிராக்டர், நெல் அறுவடை இயந்திரம் செல்லவேண்டும் என்று சொல்லியுள்ளார்.

வழி சம்பந்தமாக அடிக்கடி எங்களுக்குள் சண்டை நடந்து பஞ்சாயத்து நடக்கும் என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. நிலம் சம்பந்தமாக தகராறு உண்டு என்று சொல்லியுள்ளார். அப்படி ஒரு முறை நடந்த போது லைன் போட அனுமதித்தது சம்மந்தமாக 10 பேர் கையொப்பம் போட்டது பற்றி புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை கேட்க சென்றபோது வாதியின் தயார் வந்ததாக புகாரில் சொல்லியுள்ளாரா என்றால் சரியல்ல.

அந்த இடத்தை லீசுக்கு விட்டு சம்பாதிக்க என் இடம் தான் கிடைத்ததா என்று பயங்கரமான கெட்ட வார்த்தைகளால் எதிரி திட்டினார் என்று புகாரில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. நான் உடைந்த மற்றொரு துண்டு தேக்கு கட்டையால் எதிரியை அடித்தேன் என்று புகாரில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

முதல் நாளே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மறுநாள் காலை . மணிக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக சொல்வது தவறு என்றாலும், மறுநாள் காலை 10.00 மணிக்கு தான் வட்ட ஆய்வாளர் அலுலகத்தில் ஆலோசனை செய்து பிறகு அங்கு வைத்து தான் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவை தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

என்னையும் குத்திவிடுவார் என்று தற்காப்பிற்காக தான் எதிரியை அடித்தேன் என்று புகாரில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

**சம்பவ தின இரவே சம்பவ இடத்தில் குச்சிகள், ரத்தம் தோய்ந்த மண், சாதாரண மண் ஆகியவை கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்ற போது பிரேதம் சம்பவ இடத்தில் இருந்ததா என்றால் இருந்தது. நான் பொய்யான வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை - இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.